A-PDF Merger DEMO : Purchase from www.A-PDF.com to remove the watermark

රාජ්‍ය පරිපාලන හා කළමනාකරණ අමාත්‍යාංශය
**பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு**
**MINISTRY OF PUBLIC ADMINISTRATION AND MANAGEMENT**

ඒකාබද්ධ සේවා අංශය | **இணைந்த சேவைகள் பிரிவு** | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතනය / தொலைபேசி: **(94) 011- 2694560** / Telephone
ෆැක්ස් / தொலைநகல்: **(94) 011- 2692254** / Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk** / E-mail
වෙබ් අඩවිය / இணைத்தளம்: **www.pubad.gov.lk** / Web Site

මගේ අංකය / எனது இல / My No: PA/CS/POLICY/වා.ස්.මා.2016
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2015.10.16

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாவட்டச் செயலாளர்கள் மற்றும்
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

**2016 ஆம் ஆண்டின் வருடாந்த இடமாற்றங்கள் – (இணைந்த சேவைகள்) இலங்கை மொழிபெயர்ப்பாளர் சேவை, இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை, அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, இலங்கை அரச நூலகர் சேவை, அலுவலக உதவியாளர் சேவை, இணைந்த சாரதி சேவை.**

இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடமாற்றங்களை 2016.01.01 ஆம் திகதியன்று அல்லது உத்தியோகத்தர்களின் பெயர்களுக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அனுமதிக்கின்றேன். இது பற்றி அமைச்சின் / திணைக்களத்தின் உரிய உத்தியோகத்தர்களிடம் அறிவித்து உரிய தினத்தில் புதிய அலுவலகத்தில் கடமையினை பொறுப்பேற்குமாறு அவர்களுக்கு அறிவிக்குமாறு வேண்டுகிறேன். அரசாங்க சேவைகள் ஆணைக்குழு / இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணைகள் ஆணைக்குழு / தேர்தல்கள் திணைக்களம் ஆகிய அலுவலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் சம்பந்தமாக நிறுவனத் தலைவர்களின் இணக்கப்பாட்டுடனேயே மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதனை அறியத் தருகிறேன்.

02. தற்போது பணியாற்றும் அலுவலகத்தில் உரிய காலத்தைப் பூர்த்தி செய்தில்லாத உத்தியோகத்தர்களுக்கு இந்த வருடாந்த இடமாற்றத்திற்காக பிரயாணச் செலவு வழங்கப்பட மாட்டாது. உரிய காலத்தைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களுக்கு தாபன விதிக் கோவையின் நடவடிக்கை முறைகளுக்கு அமைவாக பிரயாணச் செலவு வழங்குதல் வேண்டும். எனினும் தங்கியிருத்தல் கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது.

03. இணைந்த சேவைகள் இடமாற்றக் கட்டளைகளுக்கு அமைவாக யாதேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு உங்கள் அமைச்சில் / திணைக்களத்தில் நிறுவியுள்ள உள்ளக இடமாற்றக் குழுவினாலும் உள்ளக இடமாற்றங்களுக்கான கட்டளைகள் வழங்கப்பட்டிருப்பின் அங்கு இணைந்த சேவைகள் இடமாற்றக் கட்டளையே அமுல்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறாயினும் உத்தியோகத்தர்களின் வேண்டுகோளின் பிரகாரம் அமைச்சு / திணைக்கள தேவைகளின் மீது அமைச்சு / திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள இடமாற்றக் கட்டளைகளே அமுல்படுத்தப்படல் வேண்டுமென நீங்கள் கருதும் பட்சத்தில் இக்கடிதத்தின் 06 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் உங்களது சிபாரிசுடன் குறித்த வேண்டுகோள் தொடர்பாக மேலதிக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது பொருத்தமானதாகும்.

04. இந்த இடமாற்றங்களை மேற்கொள்ளும் போது இடமாற்றச் சபையினால் கடைபிடிக்கப்பட்ட இடமாற்ற நடைமுறை 2015.06.16 ஆம் திகதிய இலக்கம் 03/2015 உடைய இணைந்த சேவைகள் சுற்றறிக்கையுடன் ஏற்கனவே உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதனுடனுள்ள இடமாற்றக் கட்டளைகளை இடமாற்றம் கோரியுள்ள அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் காண்பித்தல் வேண்டும். இந்த இடமாற்ற கட்டளைக்கு உட்படுகின்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு 2015.12.31 ஆம் திகதி வரையில் பிற்போடப்பட்ட இதற்கு முன்னர் வழங்கப்பட்டுள்ள இடமாற்றமாக இருப்பின் அவ்வாறான உத்தியோகத்தர் ஒருவருக்கு மீண்டும் 2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இடமாற்ற கட்டளை ஒன்றின் மூலம் வேறொரு இடமாற்றக் கட்டளை வழங்கப்பட்டிருப்பின் அதன்போது முன்னர் வழங்கப்பட்ட இடமாற்றக் கட்டளை வலுவிழந்துவிடும் என்பதனைக் கவனத்திற் கொள்ளவும்.

05. இடமாற்ற நடைமுறையில் அல்லது இணைந்த சேவைகள் சுற்றறிக்கை 03/5015 இல் அல்லது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் இலக்கம் 1589/30 உடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் நடைமுறை ஒழுங்கு விதிகள் (தொகுதி இலக்கம் 1) இன் XVIII அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மற்றும் இணைந்த சேவைகள் சுற்றறிக்கை 03/2015 இன் 6.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தமது இடமாற்ற கோரிக்கைகள் தொடர்பாக வருடாந்த இடமாற்றக் குழுவின் கவனத்திற்கு உட்பட்டிராத பட்சத்தில் மாத்திரம் வருடாந்த இடமாற்ற முன்மொழிவு மீளாய்வு குழுவிடம் கருத்துக்களை சமர்ப்பிக்க முடியும். அரசாங்க சேவைகள் ஆணைக்குழு செயலாளரின் இலக்கம் PSC/APL/07/14/2013 மற்றும் 2013.09.13 ஆம் திகதிய கடிதத்தின் கட்டளைகளின் பிரகாரம் வருடாந்த இடமாற்ற மீளாய்வு குழுவின் தீர்மானத்தின் பின்னர் மீண்டும் மேற்கொள்கின்ற மீளாய்வுகள் தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் முடிவு வழங்கப்பட்டதன் பின்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற மேன்முறையீடுகள், கஷ்டங்கள் அல்லது திணைக்களத் தலைவர்களின் சிபாரிசின் மீது வருடாந்த இடமாற்ற தீர்மானங்களை உரிய தினத்திற்குப் பின்னர் பிற்போடப்பட மாட்டாது. வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பிலான மேன்முறையீடு ஒன்றிற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட தீர்மானங்கள, அத்தீர்மானங்களை தடுக்கின்ற கட்டளையொன்று இல்லாத பட்சத்தில் உடனடியாக அமுல்படுத்துதல் வேண்டும்.

06. விளக்கமளிக்கும் விண்ணப்பப் படிவத்தின் மாதிரிப் படிவமொன்று (இ.சே/வ.இ.மா/04) இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. குறித்த கோரிக்கைகள் பற்றி கவனத்திற் கொள்வதற்காக இந்த மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப தயாரித்துக் கொண்ட விண்ணப்பப் படிவங்களை 2015.11.02 **ஆம் திகதிக்கு முன்னர்** அனுப்பி வைக்குமாறு தயவுடன் வேண்டுகிறேன். அன்றைய தினத்திற்குப் பின்னர் கிடைக்கப் பெறுகின்ற கோரிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட மாட்டாது என்பதனையும் உரிய அலுவலர்களுக்கு அறிவித்தல் வேண்டும். மேலும் இடமாற்றப் பட்டியலில் குறித்த உத்தியோகத்தரின் பெயருக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர் இலக்கத்தை (Employee No.) விண்ணப்பத்தில் குறிப்பிடாத விண்ணப்பங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட மாட்டாது.

07. உங்கள் அமைச்சிற்கு / திணைக்களத்திற்கு வெளியே இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை **பதிலாள் வரும் வரையில் நிறுத்திக் கொள்ளாது** உரிய தினத்தன்று புதிய அலுவலகத்தில் கடமையினைப் பொறுப்பேற்கக் கூடியவாறு விடுவிக்குமாறு அறியத்தருவதுடன், இந்த இடமாற்றங்களைத் தாமதமின்றி அமுல்படுத்துதல் வேண்டும் எனவும் அறியத் தருகிறேன். முறையான அனுமதியின்றி இந்த இடமாற்றங்களை / புறக்கணிக்கின்ற உத்தியோகத்தர்கள் தொடர்பில் 03/2015 சுற்றறிக்கையின் 8.8 ஆவது பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியும் என்பதனையும் மேலும் அறிவிக்கின்றேன்.

ஒப்பம் / கே.வீ.பீ.எம்.ஜே. கமகே
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

# 2016 வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பில் மீளாய்வுக் குழுவிற்கு விளக்கமளிக்கும் விண்ணப்பப் படிவம்

| | | | |
|---|---|---|---|
| பதவியும் வகுப்பு | | இ-மனித வள இலக்கம் (□ணி□□□□ லுப□□ற்□தி□ – □□□□□□ □தி□□□□□□ – ள □ □□லு□□ற்□:) | |

அ. தனிப்பட்ட தகவல்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. முதலெழுத்துக்களுடன் பெயர் -: | | | |
| 02 .பிறந்த திகதி :- YYYY/MM/DD | 03 .வயது-:(2015.12.31 திகதியன்று) வரு...........மாதம்.........திகதி........... | 04தேசிய . அடையாள அட்டை இல:- | 05 .ஆண்/ பெண் :- F / M |
| 06 .நிரந்தர முகவரி -: | 07 .தற்காலிக முகவரி :- | 08.தொலைபேசி இலக்கம் அலுவலகம் :- | |
| 09. விவாகமானவரா என்பது -: | 1 0 .வாழ்க்கைத் துணையின் பெயர் -: | 11 .வாழ்க்கைத் துணையின் தொழில் மற்றும் சேவை நிலையம் -: | |
| 12 .பிள்ளைகளின் எண்ணிக்கை | 13 .அவர்களது வயது -: | 14 .கல்வி கற்கும் பாடசாலை -: | |

ஆ. சேவை பற்றிய தகவல்கள்

| | |
|---|---|
| 15 .□ணி□□□□ லுப□□ற்□தி□ □□□□□□ □தி□□□□□□ ள □ □□லு□□ற்□:) | |
| 16 .தற்போதைய சேவை நிலையம் -: | 17. சேவை நிலையம் அமைந்துள்ள நகரம் -: |
| 18 .தற்போதைய சேவை நிலையத்தில் கடமைகளைப் பொறுப்பேற்ற திகதி :- YYYY/MM/DD | 19 .தற்போதைய சேவை நிலையத்தில் சேவைக் காலம் :- (2015.12.31 ஆந் திகதியன்று) வருடம் ...........மாதம் ................ நாட்கள்........ |

***வருடாந்த இடமாற்றங்கள் – 2014 தொடர்பில் மேலே குறிப்பிடப்பட்ட அலுவலரின் மீளாய்வுக் குழு விண்ணப்பத்தினை நான் பரிந்துரைக்கின்றேன்.***

................................

................................

*திகதி*

கையொப்பம்

ஈ.<u>*அமைச்சின் / திணைக்களத் தலைவரின் சிபாரிசு:*</u>

- மேலே பெயர் குறிப்பிட்ட அலுவலரின் 2016 இடமாற்றத்தை பதிலீட்டுடன்/ பதலீடின்றி/பதிலீட்டின் பின்னர் விடுவிக்க முடியும் என்ற அடிப்படையில் சிபாரிசு செய்கின்றேன்.

...........................................

................................

*திகதி*

கையொப்பம்

பதவி முத்திரை

වාර්ෂික ස්ථාන මාරුවීම් - 2016

ශ්‍රී ලංකා රජයේ භාෂා පරිවර්තක සේවය

| අනු අංකය | සේවක අංකය | නම | පන්තිය | වර්තමාන සේවා ස්ථානය | නව සේවා ස්ථානය |
| --- | --- | --- | --- | --- | --- |
| 1 | | ජී.එම්.ඩී.එන්. ජීවන්දරගේ වැලිවිට මහත්මිය | I | තැපැල් මූලස්ථානය | විගණකාධිපති දෙපාර්තමේන්තුව |
| 2 | | එච්.එන්. මුදුන්කොටුව මෙනවිය | I | විගණකාධිපති දෙපාර්තමේන්තුව | තැපැල් මූලස්ථානය |
| | | | | | |
| 3 | | එස්.එම්.එම්.ඩබ්ලිව්. ගුණවර්ධන මහත්මිය | I | මහවැලි සංවර්ධන හා පරිසර අමාත්‍යාංශය | මුදල් අමාත්‍යාංශය |
| 4 | | එම්.ජී. ගමගේ මහත්මිය | I | මුදල් අමාත්‍යාංශය | මහවැලි සංවර්ධන හා පරිසර අමාත්‍යාංශය |
| | | | | | |
| 5 | | පී.ඒ.සී.එස්. කරුණාරත්න මහත්මිය | I | තරුණ කටයුතු අමාත්‍යාංශය | ප්‍රවාහන අමාත්‍යාංශය |
| 6 | | අයි.එස්. වීරකෝන් මහත්මිය් | I | ප්‍රවාහන අමාත්‍යාංශය | ප්‍රවාහන අමාත්‍යාංශය |
| | | | | | |
| 7 | | ඒ.එල්.එම්.පි. ගුණසිංහ මහත්මිය | I | මහාභාරකාර දෙපාර්තමේන්තුව<br><br>(අනුප්‍රාප්තිකයකු අවශ්‍ය නොවස බව දන්වා ඇත) | බන්ධනාගාර දෙපාර්තමේන්තුව |